# பசுமலையில் அடையாளம் காணப்பட்ட கிழக்கிந்திய கம்பெனி படை கேப்டன் கல்லறை

**மதுரை, மார்ச் 30 –**

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி செயலாளர் விஜயராகவன்வழி காட்டுதல்படி பேராசிரியர் ஆத்மநாதன் பசுமலையில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய கேப்டன் லாங்வொர்த் கல்லறையை அடையாளம் கண்டார்.

அவர் கூறியதாவது: மதுரையில் கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய அதிகாரிகளில் பலர் பலவித நோய்கள் தாக்கியதில் இறந்தனர். கல்லறை கல் வெட்டுக்களே இதற்கு சாட்சி. பசுமலை கல்லறையில் உள்ள கேப்டன் தியோடர் அட்ரியன் ஜான் ஜேம்ஸ் லாங்வொர்த் கல்லறை பல வரலாற்று தகவல்கள்ளை சொல்கிறது.

இவர் கிழக்கிந்திய கம்பெனி படையில் பயிற்சி பெறும் வீரராக 1819ல் இணைந்தார். பின்னர் லெப்டினன்ட்டாக, கேப்டனாக பதவி உயர்வு பெற்றார். 1836ல் வெளியிட்ட ஆவணத்தில் கேப்டன் லாங்வொர்த் ஐரோப்பிய ராணுவ நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதம் உள்ளது. இதில், தனக்கு கீழ் பணியாற்றும் என்சைன் ஜான் யங் வில்கின்சன் என்பவர் கேப்டன் கட்டளைக்கு கீழ்படியாமல் முரட்டுத் தனமாக சண்டையிடுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

காட்டன் என்பவர் எழுதிய 'லிஸ்ட் ஆப் இன்ஸ்கிரிப்ஷன் ஆன் டாம்ப்ஸ் அண்ட் மான்யூமென்ட்ஸ் இன் தா மெட்ராஸ் பிரசிடென்சி' நூலில் லாங்வொர்த் ஸ்கந்தமலை என்ற தற்போதைய திருப்பரங்குன்றத்தில் பணியாற்றி 1837ல் இறந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

காக்கா தோப்பில் பல ஆங்கிலேயர்கள் கல்லறைகள் உள்ள போது தனி ஒருவரது கல்லறை மட்டும் பசுமலையில்இருக்கிறது. ஒருவேளை திருப்பரங்குன்றத்தில் பணியாற்றி இறந்ததால் இங்கு அடக்கம் செய்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்களப்பணியில் மதுரை சிறையில் பணியாற்றிய கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் குறித்த ஆதாரங்களும் கிடைத்துள்ளன என்றார்.



பசுமலையில் உள்ள கேப்டன் தியோடர் அட்ரியன் ஜான் ஜேம்ஸ் லாங்வொர்த் கல்லறை

Scanned with CamScanner